மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பிற்பகல் 2-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

32. திருவாளர்கள் வெல்பேக் இண்டஸ்ட்ரீஸ், டிஷா எண்டர்பிரைசஸ் மற்றும் எம்.எஸ். மார்கட்டிங் ஏஜன்சீஸ் ஆகியோர்கள் நெய்யப்படாத மனிதனால் தயாரிக்கப்பட்ட துணியின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் வரி, அபராதம் ஆகியவற்றின் வேறுபாட்டுத் தொகையினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி-2) துறையின் 20-2-2008 ஆம் நாளிட்ட 33 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

33. சென்னை, திருவாளர்கள் சாயர் அண்டு கம்பெனி மற்றும் சிங்வி பிரதர்ஸ் ஆகிய நிறுவனங்கள், மண்ணெண்ணெய் திரி ஸ்டவ், மண்ணெண்ணெய் திரி ஸ்டவின் உதிரி பாகங்கள் மற்றும் துணை பாகங்கள் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் வரி, அபராதம் ஆகியவற்றை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி-2) துறையின் 27-8-2008 ஆம் நாளிட்ட 123 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2008 நவம்பர் 14]

[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

34. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம், இந்திய அரசின்கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்கள் மூலமாகவும் மற்றும் இறக்குமதி செய்வதாயின் கனிமம் மற்றும் உலோகங்கள் வணிக நிறுவனம் மூலமாக உள்நாட்டு நிலக்கரியைக் கொள்முதல் செய்யலாம் என அறிவித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 28-4-2008 ஆம் நாளிட்ட 172 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

35. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, இராஜீவ் காந்தி கிராமின் வித்யுதிகரன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள 26 மாவட்டங்களில் நடைபெறும் தமிழ்நாடு மின்சார வாரியப் பணிகளையும் வருங்காலப் பணிகளையும் தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்கு நேரடியாக வழங்குவதற்கு வகை செய்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 16-6-2008 ஆம் நாளிட்ட 242 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

36. மாநில அரசு மற்றும் மத்திய அரசின் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் மத்திய, மாநில அரசு பல்கலைக்கழகங்களின்மூலம் அரசுத் துறைகள் மற்றும் பிற முகமைகள் நேரடியாக பயிற்சிச் சேவையை கொள்முதல் செய்யலாம் என அறிவித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 7-10-2008 ஆம் நாளிட்ட 437 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

37. பால் மற்றும் பிற பால் பொருட்களை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு மூலமாகவும், அத்தியாவசியமான பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை மற்றும் மைதா ஆகியவைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு சிறைத் துறை

கொள்முதல் செய்யலாம் என அறிவித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 11-11-2008 ஆம் நாளிட்ட 483 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

38. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பாதுகாப்பு முகவரமைப்புகள் விதிகள் இயற்றியது குறித்து உள் (காவல்-13) துறையின் 11-8-2008 ஆம் நாளிட்ட 922 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தனியார் பாதுகாப்பு முகவரமைப்புகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 29/2005) 25 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

39. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

40. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

41. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

42. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த தமிழ்நாடு அரசின் உள்ளாட்சி அமைப்புகள் மீதான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ், ஆங்கிலம்)

43. 18-12-2005 அன்று சென்னை மாநகர், எம்.ஜி.ஆர். நகர், அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியிலுள்ள நிவாரண உதவி மையத்தில் சில நபர்கள் இறந்ததற்கும், காயமடைந்ததற்கும் வழி வகுத்த காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட நீதியரசர் திரு. ஏ. இராமன் விசாரணை ஆணையத்தின்

அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

44. அரசு தலைமைச் செயலாளருக்கும், ஒரு முதுநிலை அதிகாரிக்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடலை ஒட்டுக் கேட்டு, பதிவு செய்தது தொடர்பாக 11-4-2008 அன்று 'டெக்கான் கிரானிக்கல்' ஆங்கில நாளிதழில் இடம் பெற்றதாகச் சொல்லப்பட்ட எழுத்துப் படியின் மூலாதாரம் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நீதியரசர் திரு. ப. சண்முகம் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

48. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-2000 முதல் 31-3-2001 வரையிலான கால அளவுக்கான முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

49. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐந்தாவது அறிக்கை. (2008-2009)

50. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஆறாவது அறிக்கை. (2008-2009)

51. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஏழாவது அறிக்கை. (2008-2009)

52. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எட்டாவது அறிக்கை. (2008-2009)

53. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை. (2008-2009)

54. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பத்தாவது அறிக்கை. (2008-2009)

55. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினொன்றாவது அறிக்கை. (2008-2009)